# கரோனா மருத்துவப் போராளிகள்,களப் பணியாளர்களுக்கு விருது

**தாம்பரம், ஜூலை 24:** சென்னை குரோம்பேட்டை ஸ்ரீபாலாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க துணிவுடன் பணியாற்றிய மருத்துவர்கள் மற்றும் முன்களப் பணியாளர்கள், கடைநிலை ஊழியர்கள் உள்ளிட்ட 400-க்கும் மேற்பட்டோரைப் பாராட்டி சனிக்கிழமை விருது, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கல்லூரி மருத்துவ ஆலோசகர் டாக்டர் வீரபாகு விருதுகள் வழங்கி பேசியது:

கரோனா நோய் தாக்கம் குறித்த பயம் மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து முன்களப்பணியாளர்களுக்கும் இருந்தபோதிலும் தங்கள் கடமை, பொறுப்பை உணர்ந்து செயல்பட்டதால் 700-க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளித்து உயிர் காத்த மனநிறைவை அனைவரும் பெற்றுள்ளோம்.

மக்களின் உயிர் காக்கும் மருத்துவர்கள் தற்போது தங்களைக் காத்துக் கொண்டு,நோயாளிகளைக் காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மருத்துவர்கள் உள்ளிட்ட அனைவரும் நோய் பாதிப்புக்குள்ளாகாத வகையில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும்.




ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற விழாவில் சிறப்பு கண்காணிப்பு சிகிச்சை பிரிவு பேராசிரியர் டாக்டர் கான்சியாம் வர்மாவுக்கு விருது வழங்குகிறார் கல்வி ஆலோசகர் டாக்டர் ஆர்.வீரபாகு. உடன் கல்லூரி முதல்வர் ஜான்சன், மருத்துவக் கண்காணிப்பாளர் சசிக்குமார், தலைமை செயல் அதிகாரி பிரபுதாஸ்

கரோனா காரணமாக தமிழகத்தில் உயிரிழந்த 798 மருத்துவர்களில் இங்கு நிலைய மருத்துவ அதிகாரியாகப் பணிபுரிந்த டாக்டர் தமிழரசியும் ஒருவர் என்றார்.

கல்லூரி முதல்வர் ஜான்சன் பேசுகையில், கரோனா இரு அலைகளை எதிர்கொண்ட நாம், கரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்து வீடு திரும்பியவர்களைத் தொடர்ந்து கண்காணித்து அவர்களுக்குத் தேவையான மருத்துவ ஆலோசனை, சிகிச்சை, மருத்துவ உதவிகளை வழங்கி வருவதுடன் மருத்துவத் தரவுகளையும் சேகரித்து வரும் இறுதியாண்டு மாணவர்கள் பாராட்டுக்குரியவர்கள். கரோனா அடுத்த அலை வந்தாலும் அதை எதிர்கொள்ளும் வகையில் தங்களது மருத்துவ அறிவாற்றலை மாணவர்கள் தொடர்ந்து மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இயக்குநர் டாக்டர் டி.ஆர்.குணசேகரன், மருத்துவக் கண்காணிப்பாளர் சசிகுமார், உதவி கண்காணிப்பாளர் மனோகரன், முதன்மை செயல் அதிகாரி பிரபுதாஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.